தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி **ombudsmanlocal@tn.gov.in**
இணையதள முகவரி **www.tnlbo.tn.gov.in**

**முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**
**ஆணை எண் 285/மா/2023**
**நாள் 1.10.2024**

திரு.வி.பி.ரவிச்சந்திரன், முறையீட்டு மனுதாரர்
திருப்பூர்

ஆணையர், எதிர் மனுதாரர்.
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4சி என்கிற முகவரியில் வசிக்கும், திரு.வி.பி.ரவிச்சந்திரன் என்பவரின் 29.08.2023 நாளிட்ட மனு 07.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 285/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4 சி என்கிற முகவரியில் வசிக்கும், திரு.வி.பி.ரவிச்சந்திரன் என்பவர் தனது 29.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திருப்பூர் மாநகராட்சியில் திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தை பொலிவுரும் நகர திட்டத்தின் கீழ் ரூபாய் 19 கோடியில் மாற்றி அமைக்க திட்டம் தயாரித்தனர் எனவும் பின்பு அது ரூபாய் 43 கோடியாக மாற்றப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். இப்பொருள் தொடர்பாக மாநகராட்சியிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியதற்கு அனைத்து தகவல்களையும் வழங்கவில்லை என்றும் வழங்கப்பட்ட ஆவணங்களை பார்த்ததில் அலுவலர்கள் திட்டமிட்டு சட்டத்திற்கு புறம்பாக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

தற்காலிக பேருந்து நிலையத்தில் செய்ய திட்டமிட்ட பணிகள் 11 மட்டுமே. இதில் 4 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை 27 பணிகளாக பிரித்து விலைப்புள்ளிகளை கோரியுள்ளார்கள். பணிகளை பிரித்து மதிப்பை குறைத்து செய்தி தாள்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வராமல் செய்துள்ளார்கள். 27 பணிகளில், 17 பணிகளை எஸ்.செல்வராஜ் என்ற ஒரே ஒப்பந்ததாரருக்கு வழங்கியுள்ளனர். 27 பணிகளில், 7 பணிகளுக்கு எஸ்.செல்வராஜ் தவிர வேறு யாரும் ஒப்பந்தம் கோரவில்லை. மறு ஒப்பந்தம் கோராமல் ஒப்பந்த விதிகளுக்கு புறம்பாக அவருக்கே பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தார்தளம் அமைப்பதில் திட்ட அறிக்கை வரிசை எண் ஒன்றில் 15 செ.மீ உயரத்திற்கு கிணற்று மண் கொண்டு நிரப்ப வேண்டும் என்று உள்ளது. தார் தளத்தை தோண்டி ஆய்வு செய்த போது ரூபாய் 9,37,107/–க்கான பணிகள் செய்யவில்லை. Collection of well gravel சாத்தியம் இல்லாத ஒன்று ஆகும் என தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்கள். சாத்தியமே இல்லாததை செய்வதாக திட்டம் தயாரித்து கொள்ளை அடித்துள்ளார்கள் என்பதை தணிக்கையில் கண்டுபிடித்த உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை துணை இயக்குநரும் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தார்தளம் அமைப்பதில் திட்ட அறிக்கை வரிசை எண் ஐந்தில் 50mm தார்தளம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். தார்தளத்தை தோண்டி ஆய்வு செய்த போது ரூபாய் 32,60,968/–க்கான பணிகள் செய்யப்படவில்லை. செய்த பணிகள் தரமில்லாமல் செய்ததால் தார்தளம் காணாமல் போய் கொண்டு உள்ளது. 3.58 கோடி ரூபாயில் செயல்படுத்தும் திட்டத்திற்கு அரசு அனுமதி பெற்று இருக்க வேண்டும். எந்த அனுமதியும் பெறாமல் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது மாநகராட்சி கடிதம் மூலம் உறுதியாகியுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.சிவக்குமார், மாநகராட்சி பொறியாளர் திரு.ரவி, செயற்பொறியாளர்கள் திரு.திருமுருகன், திரு.சபியுல்லா மற்றும் ஒப்பந்ததாரர்கள் திட்டமிட்டு தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதில் சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு புறம்பாக போலியாக ஆவணங்களை தயாரித்து மூன்று கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்துள்ளார்கள். எனவே தக்க நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனு தொடர்பாக அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 26.09.2023 நாளிட்ட அறிவிப்பு மற்றும் 25.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 19.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“திருப்பூர் மாநகரில் 2 பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் இருந்து வந்த நிலையில் மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் காமராஜர் சாலையில் உள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதியதாக பேருந்து நிலையம் கட்ட ரூபாய் 36.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணியை துவக்க வேண்டிய நிலையில் பேருந்துகளை நிறுத்த தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 25.08.2019 அன்று மாவட்ட ஆட்சியர் முன்னிலையில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளில் விரைவில் தற்காலிக பேருந்து நிலையத்தினை அமைக்க இடம் தெரிவு செய்யுமாறும், உடன் பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதிதாக கட்டும் பணியினை விரைவில் துவங்குமாறும் ஆணையர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

பல்லடம் சாலை, காங்கயம் சாலை, தாராபுரம் சாலை என பல இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவில் பல்லடம் சாலை மற்றும் காங்கேயம் சாலைப்பகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கத் தேவையான அளவு மாநகராட்சி இடம் இல்லாத காரணத்தால் பொது மக்கள் நலன் கருதி போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கத்தில் தாராபுரம் சாலையில் கோவில்வழி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் முடிவு செய்யப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி 159.35 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சுமார் 20.00 இலட்சம் மக்கள் தொகையுடன் வளர்ச்சி பெற்று வருகிறது. பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப மாநகராட்சி பகுதிக்குள் போக்குவரத்து நெரிசலை குறைக்க புதிய பேருந்து நிலையம் கோவில்வழி பகுதியில் கட்டப்பட்டு வருகிறது. மனுதாரர் குறிப்பிட்ட மையப்பகுதியில் தற்போது தற்காலிக பூ மார்கெட் செயல்படுகிறது. இந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடமன்று. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஏற்கனவே இருந்த பூ மார்க்கெட்டை இடித்து புதிய மார்க்கெட் கட்டவேண்டிய காரணத்தினால் Agri. Departmentக்கு சொந்தமான காலியிடத்தில் ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 50,000/– வாடகை செலுத்தி அத்துறைக்கான இடத்தில் தற்காலிக பூ மார்க்கெட் செயல்பட்டது. மனுதாரர் தெரிவித்தது போல் பேருந்து நிலையம் அமைக்கும் பட்சத்தில் நகரின் போக்குவரத்து நெருக்கடி அதிகரிக்கும். மேலும் Agri. Departmentக்கு வாடகை செலுத்த வேண்டி உள்ளதால் மாநகராட்சியின் நிதிநிலை பாதிக்கக்கூடும் என தெரிவித்துள்ளார்.

கோவில்வழி பகுதியில் தேர்வு செய்யப்பட்ட இடமானது மாநகராட்சி சுகாதார பணியாளர்களின் தற்காலிக குடியிருப்பு மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடமாகவும், தாராபுரம் சாலையை விட பள்ளமாகவும், களிமண் பூமியாகவும் இருந்ததால் தேவையான அளவிற்கு கிணற்று மண் கொண்டு சமன் செய்து தார்தளம் அமைக்கவும் மற்றும் சுற்றுச்சுவர்கள், பொதுக் கழிப்பிடங்கள், இலவச சிறுநீர்க் கழிப்பிடங்கள், ஆழ்குழாய் கிணறுகள், சிறுபாலங்கள், மழைநீர் வடிகால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பயணிகள் நிழற்குடைகள், பேருந்து நிறுத்தும் இடங்கள், குடிநீர் வசதி, மின்கம்பங்கள், மின்சார வசதிகள், கண்காணிப்பு அறைகள், பேருந்து ஒடு தளம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன.

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பழைய பேருந்து நிலையத்தை விரைவில் காலி செய்து தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளை பொதுமக்கள் உபயோகிக்கும் வகையில் ஆரம்பித்து விரைவில் முடிக்க அவசியம் ஏற்பட்டதினால், மேற்படி மாநகராட்சி ஆணையர் (தனி அலுவலர்) அவர்கள் வரம்பிற்குட்பட்டு ரூபாய் 20.00 இலட்சத்திற்கும் மிகாமல் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சுற்றுச்சுவர்கள், மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு 25.09.2019 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. பயணிகள் காத்திருப்பு கொட்டகைகள், பேருந்து நிறுத்தம், சிறுநீர் கழிப்பிடம், ஓடுதளம், சிறுபாலம், ஹைமாஸ் மின்விளக்குகள் போன்ற 17 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 26.09.2019 ல் கோரப்பட்டது.

மழைநீர் வடிகால் கட்டுதல், தெற்கு பகுதியில் சுற்றுசுவர் கட்டுதல் போன்ற 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 03.02.2020ல் கோரப்பட்டது. பேருந்து நிலையத்தின் முன்பகுதியில் தார்தளம் அமைக்க 3 பணிகளுக்கு 11.02.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.மேல்நிலை தொட்டி கட்டுதல் மற்றும் மின்கம்பங்களுடன் கூடிய, மின்விளக்குகள் அமைத்தல் போன்ற 2 பணிகளுக்கு 20.03.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களுக்கு, முன்புறம் பேவர் பிளாக் தளங்கள் அமைக்கவும், தென்கிழக்குப் பகுதியில் தார்தளம் அமைக்கவும் 2 பணிகளுக்கு 22.5.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை கட்டுதல் மற்றும் பேருந்து நிலையத்தின் முன்புறம் 3 way signal அமைக்கவும் 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 02.07.2020 ல் கோரப்பட்டது. ஆக மொத்தம் 33 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகளை கண்காணிக்க உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மாநகரப் பொறியாளர் ஆகியோர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு தரமாக முடிக்கப்பட்டுள்ளது. (புகைப்படங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் இணைக்கப்பட்டுள்ளது).

ரூபாய் 20.00 இலட்சத்திற்கு மேலான பணிகள் மாமன்ற அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் ரூபாய் 25.00 இலட்சத்திற்கு மேலான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்புகள் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்ய வேண்டும். பணிகளை விரைவில் ஆரம்பிக்க காலதாமதத்தை தவிர்க்க ஆணையர்/தனி அலுவலர் அவர்களின் வரம்பிற்குட்பட்டு, நிர்வாக அனுமதி பெறுவதற்கு ஏதுவாக ரூபாய் 20.00 இலட்சத்திற்கு மிகாமல் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. சில பணிகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிலையிலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் பணிகள் விரைவில் முடித்து பொதுமக்கள் உபயோகத்திற்கு கொண்டு வரவேண்டிய அவசியத்தினாலும், மதிப்பீட்டு விலையை விட குறைவாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்புகள் அனைத்தும் ஒளிவுமறைவற்ற வகையில் Website–ல் வெளியிடப்பட்டு, அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட்டன.

தார்தளம் (ஓடுதளம்) அமைக்கப்பட்ட இடங்களில் ஏற்கனவே இருந்த பழைய களிமண் மற்றும் குப்பை மண்கள் அகற்றப்பட்டு , 150MM அளவிற்கு கிணற்று மண் போடப்பட்டு, பிறகு WMM-175MM நிரப்பப்பட்டு, DBM-50MM மற்றும் BC-30MM அளவிற்கு போடப்பட்டு மழைநீர் தேங்காதவண்ணம் வடக்குப்பகுதி வாட்டமாக இருக்கும் வகையில் தார்தளம் அமைக்கப்பட்டது. மேற்படி பணிகள் அனைத்தும் உதவிப்பொறியாளரால் கண்காணிக்கப்பட்டு, உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மாநகரப் பொறியாளர் ஆகியோர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு தரமாக முடிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது அரசின் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி 2022–23–ன் கீழ் ரூபாய் 26.00 கோடி மதிப்பீட்டில் கோவில்வழி தற்காலிக பேருந்து நிலையத்தினை அனைத்துவித நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள புகார்களில் எவ்வித முகாந்திரமும் இல்லை எனத் தெரிவிப்பதுடன், தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கான அவசர அவசியம் கருதியே செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. அதனைத் தவிர மனுதாரர் குறிப்பிட்டவாறு தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 29.08.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருப்பூர் மாநகராட்சி பேருந்து நிலையத்தினை பொலிவுரும் நகர திட்டத்தின் கீழ் ரூபாய் 19 கோடியில் மாற்றி அமைக்க திட்டம் தயாரித்தனர். பின்பு அது ரூபாய் 43 கோடியாக மாற்றப்பட்டுள்ளது. திட்டமிட்ட பணிகள் 11 மட்டுமே, இதில் 4 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை 27 பணிகளாக பிரித்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. பணிகளை பிரித்து மதிப்பை குறைத்து செய்திதாள்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வராமல் செய்துள்ளார்கள். 27 பணிகளில், 17 பணிகளை எஸ்.செல்வராஜ் என்ற ஒரே ஒப்பந்ததாரருக்கு வழங்கியுள்ளனர். 27 பணிகளில், 7 பணிகளுக்கு எஸ்.செல்வராஜ் தவிர வேறு யாரும் ஒப்பந்தம் கோரவில்லை. மறு ஒப்பந்தம் கோராமலே ஒப்பந்த விதிகளுக்கு புறம்பாக அவருக்கே பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தார்தளம் சரியாக தரமில்லாமல் செய்ததால் காணாமல் போய் கொண்டு உள்ளது. மேலும் அரசு அனுமதி பெறாமலும் பணிகள் மேற்கொண்டுள்ளனர். சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு புறம்பாக போலியாக ஆவணங்களை தயாரித்து மூன்று கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளி விதி முறைகள், ஆணையாளர் அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து செலவு செய்யும் அதிகாரம், தற்காலிக பேருந்து நிலைய பணிகளுக்கு மூன்றாம் நிறுவனத்தின் தரச் சான்று, தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசு அனுமதி ஆவணங்கள், நிரந்தரப் பேருந்து நிலையம் அமைக்கப்படுவது தொடர்பாக நான் கேட்டுள்ள ஆவணங்களின் நகல்களையும் தளப்பதிவுப் புத்தகங்களையும் ஆணையம் பெற்று, தவறு செய்த மாநகராட்சி பணியாளர்களுக்கு தக்க தண்டனை வழங்குமாறும் இனிவரும் காலங்களில் இது போன்ற முறைகேடுகள் நடப்பதை தடுக்க விதிமுறைகளை கடுமையாக்க அரசுக்கு பரிந்துரை செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) திருப்பூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் 29.08.2024 அன்று நடைப்பெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருப்பூர் மாநகரில் 2 பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் இருந்த நிலையில், மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் காமராஜர் சாலையில் உள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதிதாக பேருந்து நிலையம் கட்ட ரூபாய் 36.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணியை துவக்க வேண்டிய நிலையில் பேருந்துகள் நிறுத்த தற்காலிக பேருந்து நிலையம் தாராபுரம் சாலையில் கோவில்வழி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைக்க மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் முடிவு செய்யப்பட்டது.

பணிகளை விரைவில் ஆரம்பிக்க கால தாமதத்தை தவிர்க்க ஆணையர் (தனி அலுவலர்) அவர்களின் வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறுவதற்கு ஏதுவாக ரூபாய் 20.00 இலட்சத்திற்கு மிகாமல் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டன. சில பணிகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிலையிலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் விரைந்து முடிக்க வேண்டி அந்த ஒரே ஒப்பந்த புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் website ல் வெளியிடப்பட்டு அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட்டன. கோவில்வழி தற்காலிக பேருந்து நிலையத்தில், தார் தளம் அமைக்க முறைப்படி மதிப்பீட்டில் உள்ளவாறு, கிணற்று மண், ஜல்லிக்கற்கள் மற்றும் தார் தளம் போன்றவை உரிய அளவுகளுடன் பணி மேற்கொள்ளப்பட்டது. மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளப்படும் ஒரு கோடி மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு அரசின் ஒப்புதல் பெற வேண்டியதில்லை என்பதையும் மாநகராட்சி ஆணையர் மற்றும் மன்றத்தின் ஒப்புதலே போதுமானது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கோவில்வழி பகுதியில், தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க முதலில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டவும் மேற்குபுறமும், வடபுறமும் சுற்றுச்சுவர் அமைக்கவும், 25.09.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதனை தொடர்ந்து பேருந்து நிறுத்து நிலையங்கள் அமைக்கவும், இலவச சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டவும், நுழைவாயிலில் சிறு பாலம் கட்டவும், பயணிகள் காத்திருப்பு கொட்டகைகள் அமைக்கவும், பேருந்து ஓடுதளம் அமைக்கவும், 26.09.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதனை தொடர்ந்து, பேருந்து நிலையத்தின் கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்குப் பகுதியில் தார் தளம் அமைக்க 10.02.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன் பின்னர், மின்கம்பங்கள் அமைக்கவும், ஆழ்குழாய் கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி கட்டவும் 20.03.2020இல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

மேற்படி பணிகள் அனைத்தும், முடிவுற்ற நிலையில், கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களுக்கு முன்புறம் பயணிகளுக்கு நடைபாதை அமைக்க பேவர் பிளாக் தளம் அமைக்கவும், பேருந்து நிலையத்தின் தென்கிழக்குப் பகுதி மற்றும் நுழைவாயில் பகுதியில், தார் தளம் அமைக்கவும் 22.05.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. இறுதியாக பேருந்து கண்காணிப்பு மற்றும் நிர்வாக அலுவலக அறைகள் கட்டவும், பேருந்து நிலையத்தின் முன்புறம் Traffic Signals அமைக்கவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டன. ஒரே நேரத்தில் மேற்கண்ட அனைத்துப்பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவில்லை என்பதையும், மாநகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப ஆணையாளரின் அறிவுரைப்படி தேவைக்கேற்ப வெவ்வேறு தேதிகளில் பணிகள் ஒவ்வொன்றாக முடிய முடிய புதிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படுவதை போலவே ஆங்கில மொழியில், இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. எனவே தமிழில் வெளியிட வாய்ப்பு இல்லாத நிலை உள்ளது என்பதை இம்முறைமன்றத்திற்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் தெரிவித்துள்ள புகாரில் எவ்வித முகாந்திரமும் இல்லை. மேலும் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை.

மேலும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் 22.08.2024 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திருப்பூர் மாநகராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்றும் அதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் புகார் அளித்துள்ளார்.

திருப்பூர் மாநகரில் 2 பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளது. மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் காமராஜர் சாலையில் உள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதிதாக பேருந்து நிலையம் கட்ட ரூபாய் 36.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை துவக்க வேண்டிய நிலையில் பேருந்துகள் நிறுத்த தற்காலிக பேருந்து நிலையம் தாராபுரம் சாலையில் கோவில்வழி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் கட்டப்பட்டுள்ளது. கால தாமதத்தை தவிர்க்க ஆணையர்/தனி அலுவலர் அவர்களின் வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறுவதற்கு ஏதுவாக ரூபாய் 20.00 இலட்சத்திற்கு மிகாமல் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும் விரைந்து முடிக்க வேண்டி ஒரே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிலையிலும் அது கூர்ந்தாய்வுக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தபுள்ளிகள் அனைத்தும் website-ல் வெளியிடப்பட்டு அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், மாநகராட்சியின் நிதியில் மேற்கொள்ளப்படும் ஒரு கோடி மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு அரசின் ஒப்புதல் வேண்டியதில்லை என்றும் மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஒப்புதல் போதுமானது என்பதும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இருப்பினும் ரூபாய் 20.00 இலட்சத்திற்கு மேலான பணிகளுக்கு மாமன்ற அனுமதி பெறப்பட வேண்டும், ரூபாய் 25 இலட்சத்திற்கு மேலான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

அறிவிப்புகள் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, சில பணிகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற நிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மதிப்பீட்டு விலையை விட குறைவாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளதால் கோவில்வழி தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதில் செய்யப்பட்ட செலவினங்கள் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள், 2023ன்படி மேற்கொள்ளபட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் மூலம் மூன்று மாதங்களுக்குள் சிறப்பு ஆய்வு மேற்கொண்டு அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்குமாறு, உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு.வி.பி.ரவிச்சந்திரன்,
4சி, ஆகாஷ் இல்லம், பாளையக்காடு,
திருப்பூர்–641 601.
2) ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.
3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை 4வது தளம்,
நந்தனம், சென்னை–600 035.
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

7.10.24

8/10/24

8/9

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை – 600 032